எனவே, மேற்படி கல்வி உதவித் தொகை செலுத்தப்படாத 866 மாணவ / மாணவியர்களின் விவரங்கள் இத்துடன் இணைத்து அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றில் தங்கள் மாவட்டத்தைச் சார்ந்த கல்வி உதவித் தொகை கிடைக்கப்பெறாத மாணவ / மாணவியர்களின் விவரங்களை கண்டறிந்து அவர்களின் தற்போது சரியான நடைமுறையில் உள்ள வங்கிக்கணக்கு விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் பூர்த்தி செய்து 06.11.2020–க்குள் (வெள்ளிக் கிழமை) இவ்வியக்கக இணை இயக்குநர்(நா.ந.தி) அவர்களின் முகவரியிட்டு அனுப்பி வைத்துவிட்டு அதன் நகலினை இவ்வியக்கக மின்னஞ்சல் முகவரிக்கு (jdnsed@nic.in) அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது மிகவும் முக்கியம் என்பதால் உரிய தனிக் கவனம் செலுத்தி செயல்படுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு மீளவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு: –**

1. கல்வி உதவித் தொகை பெற்ற 4789 மாணவர்களின் விவரங்கள்
2. கல்வி உதவித் தொகை கிடைக்கப் பெறாத 866 மாணவர்களின் விவரங்கள்
3. படிவம்

பள்ளிக்கல்வி இயக்குநர் 3/12
24/10/2020

பெறுநர்:–

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**நகல்:–**

அரசு முதன்மைச் செயலாளர்

பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம்,

சென்னை – 9 – அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.